இப்போது இதுபற்றி சர்ச்சை செய்கிறோம். அதன் காரணமாக இந்த ஹெட் கான்ஸ்டபிள் மீதோ அல்லது அந்த விசுவநாதன் என்றோ ஏதோ பெயர் சொன்னார்கள், அவர் மீதோ 'அவுட் ஆஃப் தி வே'-யில் சென்று—என்கொயரி வைத்து நடவடிக்கை எடுப்பது என்பது அவர்கள் விஷயம். அதில் செய்யவேண்டியதைச் செய்யலாம்.—அவர்கள் இதை ஒரு பெரிய பிரச்னையாக்கி விட்டார்கள் என்று அவர்களைத் தண்டிக்கும் விதத்தில் விக்டிமைசேஷன் செய்யமாட்டோம், அவுட் ஆப் தி வேயில் சென்று ஒன்றும் செய்ய மாட்டோம் என்ற உத்தரவாதத்தைத் தந்தால் இதை வாபஸ் வாங்குவது பற்றி யோசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இப்பொருள்குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) கோவை சோமசுந்திரா ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் அல்லலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கோவையில் 1,500 பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை செய்யும் சோமசுந்திரா மில் கடந்த நாற்பது நாட்களாக மூடப்பட்டு 1,500 தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிக்குப் பலியாக்கபட்டுவரும் நிலை பற்றி விவாதிக்க வேண்டும் என்று திரு. எம். பூபதி அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆலைகளை மூடுவது, வேலைநிறுத்தம் ஆகியவைபற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க அனுமதி தருவதில்லை என்று மரபு காரணமாக இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிவிப்பு.

1970-71-ம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவில், முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தில், சட்டப்பேரவை விதி 193 (4)-ன் கீழ் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை உறுப்பினராக நியமித்திருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

அடுத்து. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

5. அமைச்சர் அறிக்கை.

முன்னாள் நிதியமைச்சர் அளித்த விடையைத் திருத்தி வேளாண்மை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, 3—9—1970 அன்று தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் உடுக்குறியிட்ட வினா எண். 406 (215)-ன் துணை வினா